

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (16.06.2025) தேனாம்பேட்டை மண்டலம், சித்தரஞ்சன் சாலையில் உள்ள குழந்தைகள் மையத்தில் வயிற்றுப்போக்கு தடுப்பு சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு ஓ.ஆர்.எஸ். கரைசல் பாக்கெட்டுகள் மற்றும் துத்தநாக மாத்திரைகள் அடங்கிய மருத்துவப் பெட்டங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மயிலாப்பூர் சட்டன்ற உறுப்பினர் த.வேலு, மருத்துவம்மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் மருத்துவர் அருண் தம்புராஜ், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.எஸ். செல்வவிநாயகம், நிலைக்குழுத் தலைவர் டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர் கி.மதிவாணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பிரான்சு நாட்டிற்கு அரசு முறை பயனமாக சென்றுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களுக்கு GOPIO France (Global Organization of People of Indian Origin) தமிழகத்தின் MSME துறையில் சிறந்த செயல்பாட்டிற்காக ”Prix d’excellence des PME, என்ற விருதினை நிர்வாகக் குழு, தலைவர் ராஜாராம் வழங்கினார்.

### 442 பாகங்களில் முதல் கட்டமாக 45 பாகங்களில்

# பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் பாகம் வாரியாக பாக முகவர்கள் ஆய்வுக் கூட்டங்கள்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - ரபிக் அகமத் ஆலோசனை வழங்கினார்கள்!

பல்லாவரம், ஜூன்.17-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் தெற்கு மற்றும் வடக்கு பகுதி திமுக சார்பில் பம்மல் வடக்கு பகுதி பம்மல் தெற்கு பகுதி மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார் பாகவும் வட்டங்கள் தோறும் பாகங்கள் வாரியாக தொகுதியில் மொத்தம் உள்ள 442 பாகங்களில் முதல் கட்டமாக மேற்கண்ட பகுதி கழகத்தின் சார்பாக 14-6-2025 சனிக்கிழமை மற்றும் 15-6-2025 ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களில் 45 பாகங்களில் பாக முகவர்கள் ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன.

14.6.2025 சனிக்கிழமை மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை பல்லாவரம் வடக்கு பகுதியில் 113, 116, 152,ஆகிய. பாகங்களிலும் பல்லாவரம் தெற்கு பகுதியில் 198, 301, 289, ஆகிய பாகங்களிலும் செம்பாக்கம் வடக்கு பகுதியில் 223, 224, 225, ஆகிய பாகங்களிலும் பம்மல் தெற்கு பகுதியில் 400, 340, 358, ஆகிய பாகங்களிலும் பம்மல் வடக்கு 426, 433, 407 ஆகிய பாகங்களிலும் பகுதியில் 15.6.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் தொடர்ந்து கூட்டங்களில் பல்லாவரம் வடக்கு பகுதியில் 151, 142, 128, 271, 298, 137 ஆகிய பாகங்களிலும் பல்லாவரம் தெற்கு பகுதியில் 274, 180, 164 ,150, 193, ஆகிய பாகங்களிலும் செம்பாக்கம் வடக்கு பகுதியில் 226, 229, 231, 233, 234, 235 ஆகிய பாகங்களிலும் பம்மல் தெற்கு பகுதியில் 327 393 350 323 329 382 ஆகிய பாகங்களிலும் பம்மல் வடக்கு பகுதியில் அஞ்சு 31 27 13 23 36 632 ஆகிய பாகங்களிலும் பாகம் முகவர்கள் ஆலோசனை ஆய்வு கூட்டம் அந்தந்த பாகம் முகவர்களின் தலைமையில் நடைபெற்றன.

இக்கூட்டங்களில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தொகுதி பார்வையாளர் ரஃபி அஹமத் ஆகியோர் பூத்துகளுக்கு நேரில் வருகை தந்து ஆலோசனைகள் வழங்கி பாகங்களை ஆய்வு செய்து சிறப்புரை ஆற்றினார்கள்.

இக்கூட்டங்களில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி சிறப்புரையாற்றும்போது நமது முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்ததலின்படி ஆயிரம் வாக்காளர்கள் கொண்ட ஒரு பூத் உள்ளது என்றால் அந்த பூத்தில் 30% வாக்காளர்களை குறைந்தது 300 பேரை உறுப்பினர்களாக சேர்த்திட உழைத்து விட வேண்டும் என்றும் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து அந்த வாக்காளர்கள் எந்த கட்சியை சேர்ந்தவர்கள் என்ற விவரங்களை கண்டறிய வேண்டும். ஒவ்வொரு வாக்காளரும் நமது தமிழக முதல்வரின் திட்டங்கள் எவ்வாறு அவர்களுக்கு பயன்படுகின்றன என்பதை கண்டறிந்து தமிழக அரசின் திட்டங்கள் மூலம் தங்களுக்கு கிடைக்கும் நன்மைகளை குறித்து அவர்களுக்கு எடுத்து கூறி விட வேண்டும்.

இரண்டாவது வாக்காளர்களை சந்திக்கும் போது அந்தந்த பாகங்களில் உள்ள குறைகளை கேட்டறிந்து அவைகளை களைய உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் இந்தப் பணிகள் அனைத்தையும் பாக முகவர்களும் தேர்தல் பணி உறுப்பினர்களும் ஓர் வாக்காளர்களும் நேரில் சந்தித்து அவர்களிடம் கேட்டு அறிந்து இந்த விவரங்களை பகுதி கழகத்திற்கு தெரிவித்து விட வேண்டும் என்று அந்தந்த பகுதி செயலாளர்கள் மாவட்ட கழக செயலாளர் தெரிவித்து அவர்களும் மூலமாகவோ அல்லது எனது மூலமாகவும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண வழிவகை செய்திட முயற்சிகள் மேற்கொள்வோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் இரவு பகல் பாராமல் உழைத்து 2026 இல் மீண்டும் கழகத் தலைவர் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி அமைய ஒவ்வொருவரும் இன்று முதல் உறுதி எடுத்து உழைப்போம் என்று உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு சிறப்புரை ஆற்றினார்.

இந்தக் கூட்டங்களை வட்டக் கழகச் செயலாளர்கள் வட்டக் கழக நிர்வாகி களுடன் இணைந்து ஒருங்கிணைப்பாளர் உடன் ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து தொகுதி பார்வையாளர் ஒவ்வொரு பாகமாக ஆய்வு மேற்கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

பகுதி கழகச் செயலாளர்கள் வே. கருணாநிதி இ. ஜோசப் அண்ணாதுரை த. ஜெயக்குமார் இ.எஸ். பெர்னார்ட் ஏ. கே. கருணாகரன் ஆகியோர் அந்தந்த பகுதியில் பாக முகவர்கள் கூட்ட ங்களை மிகச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர் ஒவ்வொரு கூட்டங்களிலும் தேர்தல் பணி குழு உறுப்பினர்கள் தகவல் தொழில்நுட்ப. தோழர் அந்த பாகங்களில் உள்ள கழக உறுப்பினர்கள் என 200க்கும் மேற்பட்டோர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

### நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

# மதுரவாயல் 143வது வட்டக் கழகக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் ச.சசிகுமார் அறிவிப்பு!

சென்னை, ஜூன்.17-

மதுரவாயல் 143வது வட்டச் செயலாளர் ச.சசிகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

மதுரவாயல் வடக்கு பகுதி, 143 ஆவது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (17.06.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூரில்) வட்டக் கழக அவைத் தலைவர் எஸ்.ரகுபதி தலைமையில் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், வளசரவாக்கம் மண்டலக்குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

ஆகவே இந்த கூட்டத்தில் 143வது வட்டக் கழகத்திற்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் மகளிர் அணி, இளைஞரணி உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் ச.சசிகுமார் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.


